திருவிளக்கேற்றும் வேளையில்திருவொற்றியூர் திருக்கோயிலை அடைந்து, இனிஎன்னால்விளக்கேற்ற முடியாமல் போனால் என் உதிரத்தைக் கொண்டு விளக்கேற்றுவேன் என்று மகிழ்ச்சியுடன் திருவிளக்குகளை முறையோடு வரிசையாக வைத்தார். நீண்டதொரு அரிவாளை எடுத்து தன் கழுத்தை அறுத்து, உதிரத்தை விளக்கில் கொட்ட முயற்சித்தார். இத்தனை சோதனைகளிலும் விளக்கேற்றுவதை கைவிடாதகலியநாயனாரது பக்தியைக்கண்டு உருகிய ஒற்றியூர்ப்பெருமானது அருட்கரம், நாயனாரது அரியும் கையைத் தடுத்து நிறுத்தியது. கோயில் முழுக்க ஒளிவெள்ளம் சூழ்ந்தது. கோயிலில் இருந்த விளக்குகள் அனைத்திலும்எண்ணெய் நிரம்பி, விளக்குகள் பிரகாசமாகஎரியதுவங்கின. கலிய நாயனார் கழுத்தில் அரிந்த இடம் அகன்று முன்னிலும்உறுதிபெற்றது. சிவபெருமான் அன்னை பார்வதியுடன் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி காட்சி கொடுத்தார். கலிய நாயனார்தம்மனைவியோடு எம்பெருமானை வணங்கினார். இறைவன் கலிய நாயனாருக்கு இழந்த வாழ்க்கையை மீட்டு கொடுத்து, இறுதியில் சிவபதம் புகுந்து சிறப்புற்றிருக்குமாறு சிவபெருமான் திருவருள் புரிந்தார்.

# தமிழகம் வரும் பிரதமரிடம் மாநில அரசின் சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்படும் – மு.க.ஸ்டாலின்



முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மருத்துவ பரிசோதனை மூலம் அவரது இதயம் சீராக இயங்கவில்லை என்பது தெரிய வந்தது. இதையடுத்து அவருக்கு ஆஞ்சியோ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் அவரது இதய செயல்பாடுகள் சிறப்பாக இருப்பது உறுதி செய்யப்பட்டது.என்றாலும் மேலும் சில நாட்கள் மருத்துவமனையிலேயே ஓய்வுஎடுக்கமருத்துவர்கள் அறிவுறுத்தினார்கள். இதனால் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மருத்துவமனையில் இருந்தபடியே. தினமும் அவரது குடும்ப உறுப்பினர்கள், அமைச்சர்கள்,தலைமைச் செயலாளர் மற்றும் அதிகாரிகளையும்சந்தித்து தனது பணிகளை செய்து வருகிறார்.

இந்நிலையில் மருத்துவமனையில் முதல்வர்மு.க.ஸ்டாலினை தலைமைச் செயலாளர் முருகானந்தம் சந்தித்து பேசியுள்ளார். அப்போது தமிழகம் வரும் பிரதமர் மோடியிடம் தமிழகத்துக்குதேவையான கோரிக்கைகள் அடங்கிய மனுவை கொடுக்க முடிவு செய்யப்பட்டது. பிரதமர் மோடியிடம் தமிழக அரசு சார்பில் கொடுக்க வேண்டிய மனுவை தயாரித்து முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் கொடுக்கப்பட்டது. அதை அவர்ஆய்வுசெய்துமனுவில் கையெழுத்திட்டார்.

“மருத்துவமனையில் இருப்பதால், தமிழ்நாட்டிற்கு வரும் பிரதமர் மோடியிடம் வழங்கவுள்ள கோரிக்கைகள் அடங்கிய மனுவைத் தலைமைச் செயலாளர் மூலமாகக் கொடுத்து அனுப்பியுள்ளேன். நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, பிரதமர் மோடியிடம் வழங்குவார்” எனமுதல்வர்மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

# இந்திய விமானப்படையில் மிக்–21 ரக போர் விமானங்களுக்கு ஓய்வு

இந்தியாவின் முதல் சூப்பர்சோனிக் போர் விமானங்களாக அடையாளம் பெற்ற மிக்–21 ரக விமானங்களை முழுமையாக பயன்பாட்டிலிருந்துநீக்கஇந்தியா முடிவு செய்துள்ளது. இதன் அடிப்படையில், செப்டம்பர் 19ஆம் தேதி சண்டிகர் விமானப்படை தளத்தில் இவைக்கான ஒரு பிரமாண்டமான பிரியாவிடை விழா நடைபெறவிருக்கிறது.

கடைசி முறையாக சேவையில் உள்ள மிக்-21 விமானங்கள், “பாந்தர்ஸ்” என அழைக்கப்படும் 23வது படைப்பிரிவைச் சேர்ந்தவை. 1963 ஆம் ஆண்டு இந்திய விமானப்படையில் இவை சேர்க்கப்பட்டதிலிருந்து, நாடு எதிர்கொண்ட முக்கியமான அனைத்து போர்களிலும் மிக்-21 விமானங்கள்முக்கியபங்கு வகித்தன.

1965, 1971 ஆகிய இந்தியா பாகிஸ்தான் போர்கள், 1999ஆம் ஆண்டு கார்கில் யுத்தம், 2019ஆம் ஆண்டு பாலகோட் தாக்குதல் என பலமுக்கியசம்பவங்களில் மிக்-21 விமானங்கள் முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தன. இந்தியாவின் வான்வழிப் பாதுகாப்பின் முதன்மை தூணாக இவை நீண்ட காலமாக இருந்தன.

இவ்விமானங்கள் சாதனைகளைப் பெற்றிருந்தாலும்,அதுதொடர்பான பல விபத்துகள் பெரும்பான்மையாக விமானிகளின்உயிரிழப்பைஏற்படுத்தியதால், “பறக்கும் சவப்பெட்டி”என்றபெயரால் குறிப்பிடப்பட்டன. இருந்தாலும், இந்தியாவின் விமானப்படை வளர்ச்சிக்காக மிக்-21 விமானங்கள் அளித்த பங்களிப்பு மறுக்க முடியாதது.

இந்தியா, மொத்தம் 850க்கும் மேற்பட்ட மிக்-21 விமானங்களை இயக்கியிருந்தது. இதில், சுமார் 600 விமானங்கள் ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் உள்ளூர் உற்பத்தியாக உருவாக்கப்பட்டன. இந்துஸ்தான் சோவியத் கூட்டணியின் அடிப் படையில் இந்த தொழில்நுட்ப பரிமாற்றம் நடைபெற்றது.

உலகளவில், 1955 முதல் மொத்தம் 11,496 மிக்-21 விமானங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில், 840 இந்தியாவுக்காகவும்,10,645சோவியத் ரஷ்யாவுக்காகவும் உருவாக்கப்பட்டன. கடைசியாக 1986ல் மிக்-21 விமானங்களின் உற்பத்தி நிறைவடைந்தது.

இந்நிலையில்,ஏறத்தாழ 60ஆண்டுகளுக்குப்பிறகு, இந்திய விமானப்படை தனது போர்திறனுக்குத் துணையாகஇருந்தமிக்-21 விமானங்களைஓய்வூதியம் அளித்து நிலைத்த பக்கம் நகர்கிறது. வரலாற்றில் ஆழமான பங்களிப்பைச் செய்த மிக்-21 களுக்கு இந்த முடிவு ஒரு புதிய யுகத்தின்தொடக்கமாகும்.

# எம்.எல்.ஏ. மேம்பாட்டு நிதியிலிருந்து சிறுவர் பூங்கா: அம்மன் கே.அர்ச்சுணன் ஆய்வு



கோவை வடக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கணபதி மாநகர் பகுதியில் உள்ள ரேணுகாதேவி கோவிலை சுற்றி உள்ள பூங்காவிற்கு ஒதுக்கப்பட்ட மாநகராட்சி இடத்தில் கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கி சிறுவர்பூங்கா,உடற்பயிற்சி கூடம்,நடைபாதைமற்றும் சுற்றுச்சுவர் அமைக்க வேண்டுமென கோவை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அம்மன் கே. அர்ச்சுணனிடம்கோரிக்கை வைத்தனர். கணபதி மாநகர் பொதுமக்களின் கோரிக்கையைஏற்று அவர் அந்த இடத்தை ஆய்வு செய்தார். அவருடன் வார்டு செயலாளர் எஸ் பி.சண்முகம்,நிர்வாகிகளும் பொதுமக்களும் உடன் இருந்தனர்.

## மகளிர் பாதுகாப்பு: உள்ளக புகார் குழு கட்டாயம் – அமைக்காவிடில் ரூ.50 ஆயிரம் அபராதம்

பணியிடங்களில் பணியாற்றும் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்கில், அனைத்துநிறுவனங்களும் உள்ளக புகார் குழுவை கட்டாயமாக அமைக்க வேண்டும் என தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தின் இணை இயக்குநர் இ.வினோத்குமார் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில்உள்ளக புகார் குழு அமைக்காத நிறுவனங்களுக்கு ரூ.50 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,10அல்லதுஅதற்கு மேற்பட்ட ஊழியர்கள் பணியாற்றும்நிறுவனங்கள் பெண்களுக்கு எதிராக எழும் புகார்களை விசாரிக்கக்கூடிய உள்ளக புகார்குழுவைஅமைப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த வழிமுறையை பின்பற்றத் தவறும் நிறுவனங்கள் மீது ரூ.50 ஆயிரம் வரை அபராதம் விதிக்கப்படும்.

மேலும்,இந்தகுழுவில் இருக்கின்றஉறுப்பினர்கள் யார், அவர்கள் செய்வது என்ன, மற்றும் புகார்கள் குறித்து தகவல்கள், தொழிற்சாலையிலோ அல்லது பணியிடத்திலோ பணியாளர்கள் அனைவரும் தெளிவாக காணக்கூடிய இடங்களில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

அதேபோல், பாலியல் துன்புறுத்தல் தொடர்பாக அரசு வெளியிட்டுள்ள நிலையான இயக்க வழிமுறைகள்அனைத்தும் நிறுவனங்கள் பின்பற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கான்கிரீட் தளம் அமைக்கும் பணியை தொடங்கி வைத்த எம்.எல்.ஏ. பி.ஆர்.ஜி.அருண்குமார்



கோவைமேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி செல்வபுரம் வடக்கு பகுதி முதல்வீதிகுறுக்குசாலை, செல்வபுரம் கிழக்கு பகுதி வல்வகணபதி கோவில் அருகில் மற்றும் அம்சி நகர்பகுதியில்இந்திராநகர் எதிரில் கிழக்கு பகுதியில் கான்கிரீட்தளம்அமைக்கும் பணியை மேட்டுப் பாளையம்தொகுதிஉறுப்பினர் ஏ.கே.செல்வராஜ் மற்றும்கவுண்டம்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.ஜி.அருண்குமார் ஆகியோர் துவக்கி வைத்தனர். உடன், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய செயலாளர் கே.வி. என்.ஜெயராம், நகர செயலாளர் குறந்தாச்சலம் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கோவில் சேவைக்கு நிதி உதவி வழங்கிய எம்எல்ஏ கே.ஆர்.ஜெயராம்



கோவை சிங்காநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட உப்பிலிபாளையம் பகுதியில் உள்ள வீரமாத்தி அம்மன் திருக்கோவிலுக்கு, சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் கே ஆர் ஜெயராம் சொந்த நிதியிலிருந்து டேபிள் சேர் வழங்கினார். நிகழ்ச்சியில் பகுதி செயலாளர் வெள்ளியங்கிரி, வட்ட செயலாளர்கள் கருப்பசாமி, சேதுவராசு, எஸ் ஆர் ரவி, கணேஷ் குமார், கோவில் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

# இந்திய பாஸ்போர்ட் இருந்தால் 59 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்கலாம்




2025ஆம்ஆண்டுக்கான ஹென்லி பாஸ்போர்ட் குறியீடு சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இது சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தின் தரவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. உலக நாடுகளின் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் எத்தனை நாடுகளுக்குத் தவறான முன் அனுமதி, விசா இல்லாமல் அல்லது வருகையின் போது விசா பெற முடியுமெனும் அடிப் படையில் இந்த தரவரிசை வெளியிடப்படுகிறது.

இந்த ஆண்டு சிங்கப்பூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அந் நாட்டு பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் 193 நாடுகளுக்குமுன்னேவிசா பெறத் தேவையில்லாமல் செல்லமுடிகிறது. ஜப்பான் மற்றும் தென் கொரியா இரண்டாவது இடத்தில் உள்ளன. ஜெர்மனி, இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளன. ஐக்கிய அரபு அமீரகம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் பெற்று 8வது இடத்திற்கும், பிரித்தானியா 6வது இடத்திற்கும், அமெரிக்கா 10வது இடத்திற்கும் தள்ளிச் சென்றுள்ளன.

இந்தியாவின் பாஸ்போர்ட் கடந்த ஆண்டைய 85வது இடத்திலிருந்து இம்முறை77வதுஇடத்திற்கு முன்னேறியுள்ளது. தற்போது இந்திய பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் 59 நாடுகளுக்குச் சுதந்திரமாக பயணம்செய்யலாம். இதில் சில நாடுகள் முழுமையாக விசாஇல்லாமல்அனுமதிக்கின்றன; மற்றவை வருகையின் போது விசா வழங்குகின்றன.

விசா இல்லாமல் செல்லக்கூடிய நாடுகளில் பூட்டான், நேபாளம், மலேசியா, மொரீஷியஸ், பிலிப்பைன்ஸ், பார்படாஸ், ஜமைக்கா, ஈரான், பிஜி, டொமினிகா போன்ற நாடுகள் அடங்கும். வருகையின் போது விசா வழங்கும் நாடுகளில் மாலத்தீவுகள், இலங்கை, ஜிபூட்டி, மியான்மர், ஜோர்டான், லாவோஸ், மொசாம்பிக்,தான்சானியா, சீஷெல்ஸ் உள்ளிட்டவை அடங்கும்.

விசா இல்லாமல் அல்லது வருகையின் போதுவிசாவழங்கும்இந்த வசதிகள் பயணிகளுக்கு நேரமும் பணமும் மிச்சப்படுத்தும். ஆனால், ஒவ்வொரு நாட்டிற்கும் விசா விதிமுறைகள் மாறுபடும். சில நாடுகள் 15 முதல் 90 நாட்கள் வரை தங்க அனுமதிக்கின்றன; சில இடங்களில் கூடுதல் ஆவணங்கள் தேவைப்படலாம். எனவே பயணத்திற்கு முன் அந்தந்த நாட்டின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் உள்ள தகவல்களை சரிபார்ப்பது அவசியம்.

இந்திய பாஸ்போர்ட் தரவரிசையில் ஏற்பட்ட மேம்பாடு, அதிக பயணச் சுதந்திரத்தை வழங்குகிறது. இதுவேலை, கல்வி மற்றும் சுற்றுலாப் பயணங்களுக்கு மேலும் வசதியாக அமையும். இது இந்திய பயணிகளுக்கு ஒரு ஊக்கத்தையும், புதிய வாய்ப்புகளையும் உருவாக்குகிறது.

# வானில் தொடர்ந்து பறக்கும் சூரிய ஒளி விமானம்!

இன்றையபெரும்பாலான விமானங்கள் எரிபொருளை அடிப்படையாகக் கொண்டு இயங்கு கின்றன. சில மணி நேரங்கள் பறந்த பிறகு, எரிபொருள் குறைவதால் அவை தரையிறங்கி மீண்டும் எரிபொருள் நிரப்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது.



இந்தச் சூழலில், சூரிய ஒளியை மூலமாகக் கொண்டு இயங்கக்கூடிய புதிய வகை விமானம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது கண்காணிப்பு நோக்கத்துக்காக உருவாக்கப்பட்ட தாகும். இந்த விமானம்90நாட்கள் வரை தரையிறங்காமல் பறக்கக்கூடிய தன்மையை கொண்டுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த ‘ஸ்கைட்வெல்லர்’ என்ற நிறுவனம் இந்த விமானத்தை வடிவமைத்துள்ளது.

இந்த விமானத்தின் இறக்கைகளில் 17,000 சூரியத் தகடுகள் பொருத்தப்பட்டுள் ளன. இவை 270 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை மூலம் சூரிய ஒளி மின்சக்தியாக மாற்றப்பட்டு விமான இயக்கத்திற்கு பயன்படுத்தப்படுகிறது.

மேகமூட்டம் இருக்கும் காலத்திலும் இந்த சூரியத்தகடுகள் 100 கிலோவாட் வரை மின்சாரம் உருவாக்கும் திறனை கொண்டுள்ளன. இந்த மின்சாரம் 635 கிலோ எடையுள்ள பேட்டரிகளில் சேமிக்கப்படுகிறது, இது இரவிலும் பறப்பைத் தொடர உதவுகிறது.

பகல் நேரங்களில் இந்த விமானம் 24,600 முதல் 34,400 அடி உயரத்தில் பறக்கிறது. இரவு நேரங்களில், மின்சாரம் சேமிக்கச் சற்று குறைந்த உயரமான 4,900 முதல் 9,800 அடி வரை பறக்கிறது.

இந்த விமானத்தின் இறக்கைகள், வழக்கமான போயிங் விமானங்களைவிட நீளமானவை. ஆனால் கார்பன் நார் பயன்படுத்தப் பட்டிருப்பதால், அதன் எடை பாரம்பரிய விமானத்தைவிட 160 மடங்கு குறைவாக உள்ளது. விமானத்தில் தானியங்கி காற்றழுத்த கட்டுப்பாட்டு மென்பொருள் நிறுவப்பட்டிருக்கிறது. இது விமானம் பறக்கும்போது ஏற்படும் காற்றழுத்தங்களை சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது.



# 1,000 ரோபோடிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை செய்து கேஎம்சிஹெச் மருத்துவமனை சாதனை

தி கோவை ஹெரால்டு

மேற்கு தமிழகத்தின் முன்னணி பல்துறை மருத்துவமனையான கேஎம்சிஹெச், 1000 மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்து சாதனை செய்துள்ளது.

கேஎம்சிஹெச் பயன்படுத்தும் அதிநவீன ரோபோடிக் தொழில்நுட்பம், எலும்பியல் அறுவைசிகிச்சை நிபுணர்களுக்கு நிகரற்ற துல்லியம் மற்றும் நோயின் தன்மைக்கேற்ப மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகளை செய்ய உதவுகிறது. இந்த மேம்பட்ட அணுகுமுறை துல்லியமான இம்பிளாண்ட், மென்மையான திசுக்கள் சேதமாவது குறைதல், மருத்துவமனையில் தங்கும் காலம் குறைதல், விரைவான குணமடைதல் மற்றும் நீண்டகால செயல்பாட்டு மேம்பாடு ஆகிய பல நன்மைகளை நோயாளிகளுக்கு அளிக்கிறது.

"1000 ரோபோடிக் மூட்டு மாற்று அறுவை சிகிச்சைகள் என்பது வெறும் எண் மட்டுமல்ல; இது 1000 தனிநபர்கள் நோயின் பிடியில் இருந்து தங்கள் இயக்கம் மற்றும் வலியிலிருந்து சுதந்திரத்தை மீட்டெடுத் ததைக் குறிக்கிறது," என்று கேஎம்சிஹெச் தலைவர் டாக்டர் நல்லா ஜி.பழனிசாமி கூறினார். "இந்த மைல்கல், நோயாளிகளின் நலனில் எங்கள் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். இந்த சாதனையை சாத்தியமாக்கிய எங்கள் எலும்பியல் குழு மருத்துவர்கள் டாக்டர் திருமலைசாமி, டாக்டர் தென்னவன், டாக்டர் லெனின் பாபு , டாக்டர் பாஸ்கரன், டாக்டர் பூபதி கிருஷ்ணன் மற்றும் எலும்பியல் துறை பணியாளர்கள் ஆகியோருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகள் மற்றும் நல்வாழ்த்துகள்."

"ரோபோடிக் அறுவை சிகிச்சை தொழில்நுட்பத்தில் எங்களது இந்த சாதனை, மருத்துவ கண்டுபிடிப்புகளில் முன்னணியில் இருப்பதற்கான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது," என்று கேஎம்சிஹெச் செயல் இயக்குனர் டாக்டர் அருண் பழனிசாமி தெரிவித்தார். "இந்த தொழில்நுட்பம் எங்கள் அறுவை சிகிச்சை நிபுணர்களுக்கு முன்பைக்காட்டிலும் மேம்பட்ட துல்லியத்தை அடைய உதவுகிறது. மேம்பட்ட மருத்துவ தொழில்நுட்பம் மூலம் நோயாளிகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்" என்று மேலும் அவர் தெரிவித்தார்.

# கோவையில் தெய்வத்திரு இ.ஏ.பழனிச்சாமி கவுண்டர் நினைவு சர்வதேச சிலம்பம் போட்டிகள் துவக்கம்

தி கோவை ஹெரால்டு




முன்னாள் அமைச்சரும், அதிமுக தலைமை நிலையச் செயலாளருமான எஸ்.பி. வேலுமணி மற்றும் நல்லறம் அறக்கட்டளையின் தலைவரும், சமூக ஆர்வலருமான எஸ்.பி. அன்பரசன் ஆகியோரது தந்தை இ.ஏ.பழனிச்சாமி கவுண்டர் நினைவாக, சர்வதேச சிலம்பம் போட்டிகள் கோவை எல்&டி பைபாஸ் சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த போட்டிகளை நல்லறம் அறக்கட்டளை தலைவர் எஸ்.பி.அன்பரசன் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் உலக சிலம்பம் விளையாட்டு சங்க தலைவர் முனைவர் சுதாகர், தொழில்நுட்ப இயக்குநர் சித்தர் துரைசாமி, இணை இயக்குநர் முனைவர் எஸ். வி. சின்னச்சாமி, மாநிலச் செயலாளர் முனைவர் கனகராஜ், மற்றும் அதிமுக கோவை புறநகர் தெற்கு மாவட்ட கழக பொருளாளர் செல்வதுரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

இந்த போட்டிகளில் பல்வேறு நாடுகளை சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட வீரரும், வீராங்கனைகளும் பங்கேற்றுள்ளனர். வயது, எடை, உயரம் போன்ற பிரிவுகளின் அடிப்படையில் பத்துக்கும் மேற்பட்ட பிரிவுகளில் போட்டிகள் நடைபெறுகின்றன.

போட்டிகளில் வெற்றி பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு வெற்றி கோப்பைகள், சான்றிதழ்கள் மற்றும் ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலும், பங்கேற்பாளர்களுக்குப் நினைவு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.



▸ கே.கிருஷ்ணகோபால் எழுதிய " இரண்டாம் மனிதனின் வீடு" "பட்டுப்பூச்சிகளுக்கும் பறவைகளுக்கும் விலாசம் இல்லை" என்ற இரண்டு கவிதை நூல்களை பாரத் கலா சங்கமம் தலைவர் டி நந்தகுமார் வெளியிட்டார். நூலை சிறு துளியின் நிர்வாக அறங்காவலர் வனிதா மோகன் பெற்றுக்கொண்டார். உடன், இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸ் அண்ட் இண்டஸ்ட்ரீஸ் தலைவர் ராஜேஷ் லுண்டு, கொடிசியா தலைவர் எம். கார்த்திகேயன், ஹிந்து நாளிதழ் பொது மேலாளர் சிவகுமார்.

## ராமதாஸ் வாழ்க்கை படமாகிறது

# இயக்குநர் சேரன் வெளியிட்ட 'அய்யா' ஃபர்ஸ்ட் லுக்

பட்டாளி மக்கள் கட்சி நிறுவனரும், சமூக நீதி மற்றும் சமூக மாற்றங்களுக்கான குரலாக விளங்கிய டாக்டர் ராமதாஸ் வாழ்க்கை வரலாறு, தற்போது திரைப்படமாக உருவாகி வருகிறது. இந்த வாழ்க்கைச் திரைப்படத்தை இயக்குநர் சேரன் இயக்குகிறார் என்பது கடந்த மாதம் வெளியான தகவல்களில் உறுதியாகிவிட்டது.

இந்நிலையில், ஜூலை 25ஆம் தேதி, தனது பிறந்த நாளையொட்டி, 87வது பிறந்த நாளை கொண்டாடிய ராமதாஸ் அவர்களுக்கு மரியாதையாக, இயக்குநர் சேரன் இப்படத்தின் முதல் தோற்றப் (First Look) போஸ்டரை வெளியிட்டுள்ளார். இந்த திரைப்படத்திற்கு 'அய்யா' என்று



பெயரிடப்பட்டுள்ளது.

படத்தை தமிழ்குமரன் புரொடக்ஷன்ஸ் சார்பில் ஜி.கே.எம். தமிழ்குமரன் தயாரிக்கிறார். முக்கியக் கதாபாத்திரத்தில் ஆரி அர்ஜுனன் நடித்துள்ளார். சமூக நலனுக்காக, இனவெளிப்பாட்டிற்காக போராடிய ஒருவரின் வாழ்க்கையை திரையில் பதிவு செய்யும் இந்த படம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

போஸ்டரை வெளியிட்டு இயக்குநர் சேரன் கூறியுள்ளார்: "இன விடுதலைக்கான போராட்டத்தின் வரலாறு. குரலற்றவர்களுக்காக அவரது குரல் கர்ஜித்தது. இப்போது அவரது கதை பெரிய திரையில் கர்ஜிக்கப் போகிறது."

சமூக நீதிக்காக தம்மை அர்ப்பணித்த ராமதாஸ் அவர்களின் வாழ்க்கை, திரைப்பட வடிவில் வெளிவர விருக்கிறது என்பது தமிழக அரசியலிலும், திரையுலகிலும் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தி யுள்ளது.

# கோவையில் நால்வர் நூல் வெளியீடு

தி கோவை ஹெரால்டு



கோவை சுந்தராபுரம் தனியார் அரங்கில் நடைபெற்ற விழாவில் அம்மையப்பர், 108 சிவலிங்கம், அறுபத்து மூவர் திருமேனிகளுக்கு கங்கை உள்ளிட்ட நதிகளின் தீர்த்த அபிஷேகம், வேள்வி, திருமுறை பாராயணம் பேரொளி வழிபாடுகள் நடைபெற்றது.

தொடர்ந்து ஒருங்கிணைந்த சிவனடியார்கள் திருக்கூட்ட தலைவர் ஆ.வெ. மாணிக்க வாசகம் எழுதிய நால்வர் நூலை பேரூராதீனம் சாந்தலிங்க மருதாசல அடிகளார் வெளியிட முன்னாள் அமைச்சர் செ.ம.வேலுசாமி பெற்றுக் கொண்டார். தொழிலதிபர் ஜெ.சிவகுமார், பா.ஜ.க. நிர்வாகி பிரீத்தி லட்சுமி, தொழிற்சங்க நிர்வாகி காமராஜ் மற்றும் சிவனடியார்கள் கலந்து கொண்டனர்.




# ஊதுபத்தியின் புகை சிகரெட்டை விட ஆபத்தானது

## புதிய ஆய்வில் எச்சரிக்கை தகவல்

மழைக்காலம் தொடங்கி, நாக பஞ்சமி உள்ளிட்ட பண்டிகைகள் இந்தியாவில் தொடங்கியுள்ளன. ஆன்மிக சடங்குகளின்போது ஊதுபத்தியின் அதிக அளவில் எரிக்கப்படுவது வழக்கமான நடைமுறையாக இருக்கிறது.

ஊதுபத்தியிலிருந்து வரும் நறுமணம் மனதுக்கு அமைதியை அளிக்கும் என்ற நம்பிக்கையுடன் இவை பயன்படுகின்றன. ஆனால், இந்த புகை நம் உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடும் என புதிய ஆய்வு ஒன்று எச்சரிக்கிறது.



தென்சீன தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் சீனாவின் குவாங்டாங் புகையிலை நிறுவனம் இணைந்து நடத்திய ஆய்வில், ஊதுபத்தியின் புகை சிகரெட்டைப் போலவே சிலசமயம் அதைவிட உடலுக்கு ஆபத்தானது என்பதைக் கண்டறிந்துள்ளனர். தூபக் குச்சிகள் எரியும் போது வெளியேறும் புகையில் 99% அல்ட்ராஃபைன் மற்றும் நுண்ணிய துகள்கள் காணப்படுகின்றன. இந்த நுண்துகள்கள் காற்றில் கலந்து உடலுக்குள் சென்று உடல் செல்களில் தீவிர பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

அதேவேளை, இந்த ஊதுபத்தி நுரையீரல் புற்றுநோய்க்கு காரணமாக இருக்கும் மூன்று முக்கிய நச்சுப்பொருட்களை கொண்டுள்ளது அவை மியூட்டஜெனிக், ஜெனோடாக்ஸிக் மற்றும் சைட்டோடாக்ஸிக் என அழைக்கப்படுகின்றன. இவைகள் நுரையீரலுக்கு மட்டுமல்ல, கண்கள், தோல் மற்றும் பார்வைக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியவை. தூபப் புகை மூச்சுப் பாதையில் எரிச்சல், அரிப்பு, சுவாச சிரமம், மற்றும் வீக்கம் போன்ற பிரச்சனைகளையும் உருவாக்கக்கூடும்.

இவை அனைத்தும், பண்டிகை காலங்களில் ஊதுபத்திகளை அதிகமாக பயன்படுத்தும் நமக்கு ஒரு முக்கிய எச்சரிக்கையாக அமைகிறது. ஆன்மிக நம்பிக்கைகளுக்காக தூபங்களை பயன்படுத்துவது தவறு அல்ல; ஆனால் அதன் பயன்பாட்டை அளவோடு வைத்தல், நல்ல காற்றோட்டம் உள்ள இடங்களில் பயன்படுத்துதல் போன்ற முன்னெச்சரிக்கைகள் அவசியமாகின்றன.

## நாக பஞ்சமி



ஆடி மாதத்தில் சுக்ல பஞ்சமி திதியில் (ஐந்தாம் நாள்) கொண்டாடப்படுகிறது. கொண்டாடப்படுகிறது. பாம்புகள் சிவன், விஷ்ணு மற்றும் சுப்பிரமணியருடன் தொடர்புடையவை. சிவபெருமான் தனது கழுத்தில் பாம்பை அணிந்துள்ளார்.

மேலும், பாம்புகள் பூமிக்கு அடியில் வாழ்கின்றன, மேலும் அவை மறைந்திருக்கும் பொக்கிஷங்களைப் பாதுகாப்பதாகக் கூறப்படுகிறது.

நாக பஞ்சமி என்பது மக்கள் நாகங்களை வணங்கும் ஒரு புனிதமான பண்டிகையாகும். பாம்புகள் கடவுள்களுக்கு நெருக்கமானவை என்றும், நம் நிலத்தைப் பாதுகாப்பவை என்றும் நம்பப்படுகிறது. கால சர்ப்ப தோஷம் உள்ளவர்கள் சிறப்பு பூஜைகள் செய்வது வழக்கம். இந்த நாளில், மக்கள் பாம்பு புற்றுகளுக்கு பால், மலர்கள், மஞ்சள், குங்குமம் மற்றும் இனிப்புகளை வழங்கி வழிபடுகின்றனர்.

LAKSHAKA TEX LIMITED

# வடகோவையில் 12 அடி நீளத்தில் 900 கிலோ எடையுடன் புலி சிலை நிறுவிய கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி



இந்தியாவின் தேசிய விலங்கான புலி உருவச் சிலை மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி திறந்து வைத்தனர். உடன், மருத்துவர் ஓ.என். பரமசிவன்.

தி கோவை ஹெரால்டு

கோவை மேட்டுப்பாளையம் சாலை வடகோவை சிந்தாமணி சந்திப்பில் கோவை மாநகராட்சியின் சார்பில் நிறுவப்பட்டுள்ள இந்தியாவின் தேசிய விலங்கான புலி உருவச் சிலை திறப்புவிழா நடைபெற்றது.

இவ்விழாவில் கோவை மாநகராட்சி ஆணையாளர் மா. சிவகுரு பிரபாகரன், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரியின் செயலர் மற்றும் இயக்குநர் டாக்டர் சி.ஏ. வாசுகி, பொருளாளர் மருத்துவர் ஓ.என்.பரமசிவன் ஆகியோர் கலந்து கொண்டு சிலையைத் திறந்து வைத்தனர்.

12 அடி நீளத்தில் 900 கிலோ எடையுடன் முன்னங்கால்களைத் தூக்கிப் பாயும் நிலையில் மிக நேர்த்தியாக அமைக்கப்பட்டுள்ள இச்சிலையை நிறுவுதல் மற்றும் பராமரித்தலுக்கான பொறுப்பையும் செலவையும் கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி ஏற்றுக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஜூலை 29 ஆம் தேதி உலகப்புலிகள் தினம் கொண்டாடப்பட உள்ள நிலையில் அதனை நினைவுகூரும் வகையில் இச்சிலை திறக்கப்பட்டுள்ளது.

## மோடி உலகில் நம்பிக்கைக்குரிய தலைவர்



உலக தலைவர்களில் யார் அதிக நம்பிக்கையை பெறுகின்றனர் என்பதை அறிய சமீபத்தில் ஒரு சர்வதேச ஆய்வு நடத்தப்பட்டது. இதில், ஒவ்வொரு தலைவரும் அவர்களின் நாட்டிலும், உலகளாவிய அளவிலும் எவ்வளவு நம்பிக்கை பெற்றுள்ளனர் என்பதற்கான மதிப்பீடு செய்யப்பட்டது.

இந்தபட்டியலில், இந்திய பிரதமர் நரேந்திர மோடி 100 இல் 75 மதிப்பெண்கள் பெற்று முதல் இடத்தை பிடித்துள்ளார். முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எட்டாவது இடத்தில் உள்ளார்.

இந்த முடிவுகள், உலக அளவில் பிரதமர் மோடிக்கு உள்ள நம்பிக்கையையும், அவரது வழிகாட்டும் முறையை மக்கள் மதிப்பதை காட்டுகின்றன.

# 4 தூண்களை இடித்து அகற்ற நீதிமன்றம் உத்தரவு அவிநாசி சாலை மேம்பாலம் திறப்பு தாமதமா?




கோவை மாநகரின் முக்கிய போக்குவரத்து நெரிசல் பிரச்சனையைத் தீர்க்கும் வகையில், உப்பிலிபாளையம் முதல் கோல்டுவின்ஸ் வரை 10.1 கி.மீ நீளமுள்ள அவிநாசி சாலை உயர்மட்ட மேம்பாலத்தின் கட்டுமானப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. ரூ.1,791 கோடி செலவில், 17.25 மீட்டர் அகலத்தில் நான்கு வழி மேம்பாலமாக இது கட்டப்பட்டு வருகிறது. விமான நிலையம், ஹோப்ஸ் காலேஜ், நவ இந்தியா, மற்றும் பீளமேடு காவல் பயிற்சிமைதானம் ஆகிய இடங்களில் ஏறு மற்றும் இறங்குதளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மேம்பாலம் ஆகஸ்ட் 2025 இறுதியில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு காரணமாக திறப்பு மேலும் தாமதமாகும் எனத் தெரிகிறது.

அவிநாசி சாலையில் உள்ள ஒரு தனியார் ஹோட்டலுக்கு சாதகமாகவும், வாகன ஓட்டிகளுக்கு இடையூறாகவும் மேம்பாலத்தின் தூண்கள் அமைக்கப்பட்டதாக புகார் எழுந்தது. இது தொடர்பாக ஒரு நில உரிமையாளர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். நீதிபதி பரத சக்கரவர்த்தி விசாரித்த இந்த வழக்கில், மேம்பாலத்தின் நான்கு தூண்கள் திட்டத்திற்கு மாறாக அமைக்கப்பட்டதாக உறுதி செய்யப்பட்டது.

தனியார் நிறுவனத்திற்கு சாதகமாக அமைக்கப்பட்ட நான்கு தூண்களை முழுமையாக இடித்து அகற்ற வேண்டும், இந்த தூண்களை முதல் திட்டப்படி 30 மீட்டர் இடைவெளியில் மீண்டும் அமைக்க வேண்டும், மேம்பாலத்தின் பாதுகாப்பு மக்களின் நலனுக்கு முக்கியம் என்பதால், தூண்கள் மாற்றப்படும்போது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். என்று நீதிமன்றம் தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

தவறான தகவல்களை நீதிமன்றத்தில் அளித்ததற்காக, நெடுஞ்சாலைத் துறையின் கோட்ட பொறியாளர் மற்றும் தலைமை பொறியாளர் தலா ரூ.1,000 முதலமைச்சரின் நிவாரண நிதிக்கு சொந்தப் பணத்தில் செலுத்த வேண்டும்.

இந்த உத்தரவு காரணமாக, மேம்பாலத்தின் திறப்பு ஆகஸ்ட் 2025-ஐ தாண்டி மேலும் தாமதமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான கோயம்புத்தூரில், மக்கள் தொகை அதிகரிப்பால் போக்குவரத்து நெரிசல் மிகப் பெரிய பிரச்சனையாக உள்ளது. குறிப்பாக, அவிநாசி சாலையில் பீக் ஹவர்களில் பொதுமக்கள் கடும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். இந்த நெரிசலைத் தீர்க்கும் நோக்கில் இந்த மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. தற்போது 95% பணிகள் முடிந்துள்ள நிலையில், நீதிமன்ற உத்தரவு மற்றும் மீதமுள்ள பணிகள் காரணமாக தாமதம் ஏற்பட்டுள்ளது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், அவிநாசி மேம்பாலத்தை கோல்டுவின்ஸ் முதல் நீலாம்பூர் வரை மேலும் 5 கி.மீ நீட்டிக்க அறிவித்துள்ளார். ஆனால், இந்த நீட்டிப்பு பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை, இதற்கு தனியாக வடிவமைப்பு மற்றும் நிலம் கையகப்படுத்தல் தேவைப்படுகிறது. அவிநாசி சாலையில் சிக்னல்களுக்கு பதிலாக நடைமுறையில் உள்ள யூ-டர்ன் முறை மக்களுக்கு மேலும் சிரமத்தை ஏற்படுத்தி வருகிறது. இதனால், மேம்பாலம் விரைவாக திறக்கப்பட வேண்டும் என்பது பொதுமக்களின் முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது. ஆனால், நீதிமன்ற உத்தரவும் மற்றும் மீதமுள்ள பணிகள் காரணமாக, ஆகஸ்ட் 2025 இறுதிக்குள் மேம்பாலம் முழுமையாக திறக்கப்படும் என பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

கோவையின் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் முக்கிய திட்டமான அவிநாசி சாலை மேம்பாலம், நீதிமன்ற உத்தரவு மற்றும் தூண்கள் மறு அமைப்பு காரணமாக தாமதமாக வாய்ப்பு உள்ளது.

# அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பு முப்பெரும் விழா கோவையில் நடைபெறுகிறது

## அமைச்சர் சு.முத்துசாமி பங்கேற்கிறார்

தி கோவை ஹெரால்டு



ரியல் எஸ்டேட் துறையில் முக்கிய பங்களிப்பை வழங்கி வரும் அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் முப்பெரும் விழா, வருகிற இன்று (ஞாயிற்றுக்கிழமை) கோவையில் நடைபெறுகிறது.

இந்த விழாவில், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை மேற்கொண்ட முழுமை திட்டம் உள்ளிட்ட பல முன்னேற்ற செயல்களை பாராட்டும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. சமூகத்தின் அடித்தள மக்களுக்கு வீட்டுவசதியை ஏற்படுத்திய இந்தத் துறையின் பணி சிறப்பாக பாராட்டப்படுகிறது.

மேலும், சிறந்த முறையில் செயல்பட்டு வரும் வீட்டு வசதி தொழில் முனைவோர்களுக்கு சிறப்புப்பரிசுகள் வழங்கப்பட உள்ளன. இதில், புதிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட உள்ளன.

இந்த விழாவுக்கு அகில இந்திய ரியல் எஸ்டேட் கூட்டமைப்பின் தேசிய செயலாளர் செந்தில்குமார் தலைமை வகிக்கிறார். மாநில துணைத் தலைவர் முரளிதரன் வரவேற்புரை வழங்குகிறார்.

தேசிய துணைச் செயலாளர் கண்ணன், கோவை மாவட்டத் தலைவர்கள் சுரேஷ்குமார் மற்றும் வில்சன் பி.தாமஸ் ஆகியோர் ஒருங்கிணைப்பில் பங்கேற்கின்றனர்.

இந்த விழாவில் தேசியத் தலைவர் டாக்டர் ஆ. ஹென்றி சிறப்புரையாற்ற உள்ளார். மேலும், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, கோவை மாநகர மேயர் ரங்கநாயகி, தகவல் ஆணைய ஆணையர் பிரியகுமார், முன்னாள் அமர்வு நீதிபதி முகமது ஜியாவுதீன், பன்னாட்டு சமூக சேவை இயக்கத்தினருள் மாவட்டத் தலைவர் ராஜசேகர் உள்ளிட்ட பல முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்கின்றனர்.

# பெல்ஜியத்தில் முதலிடம் பிடித்து அசத்திய அஜித் குமார் அணி



சினிமாவில் இருந்து தற்காலிகமாக விலகிய நடிகர் அஜித்குமார், தற்போது முழுமையாக கார் பந்தயத்தில் கவனம் செலுத்தி வருகிறார். 'குட் பேட் அக்லி' திரைப்படம் வெற்றி பெற்றதையடுத்து, அவர் சில மாதங்கள் முழுவதும் கார் ரேஸில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்திருந்தது நினைவில் உள்ளது.

இந்த நிலையில், தற்போது அஜித் புது கெட்டப்பில் முழு மொட்டை தலைமுடியுடன் கார் ரேஸில் தீவிரமாகப் பங்கேற்றுவருகிறார். அவருடைய போட்டோ களும் வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றன.

பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்திய நிகழ்வாக, பெல்ஜியத்தில் நடைபெற்ற கிரவுட்ஸ்டிரைக் ஸ்பா ஜிடி3 போட்டியின் ப்ரோ -ஏஎம் பிரிவில், 'அஜித்குமார் ரேஸிங்' அணி முதலிடம் பிடித்து பெரும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து அஜித் ரேஸிங் குழு வெளியிட்ட செய்தியில், "எங்கள் அணியில் உள்ள பேபியன் மற்றும் மேதியூ உள்ளிட்டவர்கள் கடினமான போட்டியில் சிறந்து விளங்கி முதலிடம் பெற்றுள்ளனர். அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள்!" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இது முதல் வெற்றிமட்டுமல்ல. ஏற்கனவே துபாயில் நடைபெற்ற கார் ரேஸிலும் அஜித் குழு மூன்றாவது இடத்தைப் பெற்றிருந்தது. அதேபோல், இத்தாலி மற்றும் பெல்ஜியத்தில் நடைபெற்ற பிற போட்டிகளிலும் பரிசுகள் பல வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சினிமாவில் தன்னையே மீறி வெற்றிகளைத் தொடர்ந்து படைக்கும் 'தல', கார் பந்தய அரங்கிலும் தன்னுடைய முத்திரையை பதித்து வருவது, அவரது பலதரப்பட்ட திறனை நிரூபிக்கிறது.

# கேப்டன் பிரபாகரன் திரைப்படம் 4K தொழில்நுட்பத்தில் வருகிறது



மறைந்த நடிகர் விஜயகாந்தின் பிறந்த நாளை முன்னிட்டு, அவர் நடித்த முக்கிய திரைப்படங்களில் ஒன்றான கேப்டன் பிரபாகரன் மீண்டும் திரைக்கு வருகிறது. இது, வரும் ஆகஸ்ட் 22ஆம் தேதி தமிழ்நாட்டு முழுவதிலும் 500-க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் ஒரே நேரத்தில் வெளியிடப்படவுள்ளது.

1991-ஆம் ஆண்டு தமிழ்ப்புத்தாண்டு தினத்தில் வெளியான இந்தப் படம், மக்கள் மத்தியில் பரவலான வரவேற்பைப் பெற்று, பாக்ஸ் ஆபிஸில் வெற்றிகரமாக ஓடியது. இப்படமே விஜயகாந்திற்கு 'கேப்டன்' என்ற புகழ்பெற்ற பட்டத்தை வழங்கியது. இப்போது, இந்த திரைப்படம் முழுமையாக 4K தொழில்நுட்பத்தில் புதுப்பிக்கப்பட்டு, ஒளிப்பதிவு, ஒலி, பார்வை அனுபவம் ஆகியவையில் புதிய அழகு பெற்றுள்ளது. விஜயகாந்தின் திரைப்படப் புகழுக்கு மரியாதை செலுத்தும் இந்த ரீ-ரிலீஸ் விழா, அவரது ரசிகர்கள் மனதில் நெகிழ்ச்சியையும் பெருமையும் ஏற்படுத்தும்.

'கேப்டன் பிரபாகரன்' மீண்டும் திரைக்கு வருவது, அவர் மீதுள்ள அன்பும் மரியாதையும் இன்னும் உயிருடன் இருப்பதற்கு சான்றாகிறது.

# தாய்மையின் அற்புதம்: பலாப்பழம் பறிக்க தாய் யானைக்கு உதவிய குட்டி யானை



கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகேயுள்ள வால்பாறை பகுதியில் வன விலங்குகளின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த பகுதிகளில் யானை, சிறுத்தை, காட்டெருமை போன்ற விலங்குகள் அடிக்கடி வனப்பகுதிகளில் இருந்து வெளியேறி, தேயிலைத் தோட்டங்கள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் உலா வருகின்றன.

இதையடுத்து, வால்பாறை முடீஸ் பகுதியில் உள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தில் உணவு தேடி வந்த தாய் யானை மற்றும் அதன் குட்டி, அனைவரையும் அசர வைத்த ஒரு செயலைச் செய்துள்ளன. அங்கு இருந்த ஒரு பலா மரத்தில் பச்சையாக பழுத்திருந்த பலாப்பழங்களை, தாய் யானை தன் நீண்ட தும்பிக்கையால் எட்டிப்பறிக்க தொடங்கியது.

மரத்தில் உயரத்தில் இருந்த பழங்களை எட்டுவதற்காக தம்பிக்கையை மகத்தான நேர்த்தியுடன் இயக்கிய தாய் யானை, அவற்றில் சிலவற்றை சாமர்த்தியமாகப் பறித்து முதலில் சாப்பிட்டது. அதன் பின், தன் குட்டியானைக்கும் பழங்களைப் பகிர்ந்தளித்து, பசியாற உதவியது. இந்த காட்சி, தாயின் அன்பும், யானையின் புத்திசாலித்தனமும் கலந்து மணக்கும் ஒரு நெகிழ்ச்சிகர தருணமாக இருந்தது.

இந்த அற்புதமான தருணத்தை அவ்வழியே சென்ற ஒருவர் தன் செல்போனில் வீடியோ எடுத்தார். தற்போது அந்த வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவி வருகிறது. பலரும் அந்த தாயானையின் செயல்களை பாராட்டி, "இது உண்மையான தாய்மை!", "மிருகங்களிடமும் உள்ள அன்பு மனிதர்களுக்குக் கடவுள் நினைவூட்டம்" எனக் கருத்துகள் பகிர்ந்து வருகின்றனர்.

Published by S.Kamalakannan Printed by S.Prabhakaran on behalf of Senthur Printers. Printed at Door No.7, Lakshmi Nagar, 2nd Street, Nallampalayam Road, New Sanganoor, Rathinapuri (Po), Coimbatore – 641027. Published from 27, Vinayagar Koil Street, Krishnaswamy Nagar, Ramanathapuram, Coimbatore – 641045. Editor K.Abirami.